10.04.2026

அ.வ.எண். 229/2022

வா.சா.1 – திரு. நடராஜ் த/பெ. பொன்னுச்சாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 10.04.2026 is accordance with the provision of Act X of 3331

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1.என்னுடைய நிறுவனத்தின் வெற்றிவேலவன் ஸ்பின்னர்ஸ் ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் தான் மேற்படி நிறுவனம் இயங்கி வருகிறது என்றால் சரிதான். மூன்று இடங்களில் நடந்து வருகிறது.1. கோதபாளையம், 2. எலச்சிபாளையம், 3. அன்னூர் (தஞ்சப்பள்ளி பிரிவு). மேற்படி மூன்று இடங்களும் கோவை மாவட்டத்தில் உள்ளது. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரி கோதபாளையம் ஆகும். மேற்படி மூன்று இடங்களிலும் ஸ்பின்னிங் யூனிட் நடைபெறுகிறது. மேற்படி 3 இடங்களும் எனக்கு சொந்தமானவை என்றால் கோதபாளையம் சொந்த இடம் மற்ற 2 இடங்கள் வாடகை இடங்கள் ஆகும்.

2. கோதபாளையத்தில் விஸ்தீரணம் ஏக்கர் 1.16 சென்ட் ஆகும். 16,000 சதுரடியில் கட்டிடம் உள்ளது. எலச்சிபாளையத்தில் உள்ள இடத்திற்கு ரூ.25,000/- வாடகை செலுத்தி வருகிறேன். அன்னூர் (தஞ்சப்பள்ளி பிரிவு) உள்ள இடத்திற்கு ரூ.1,62,000/- வாடகை செலுத்தி வருகிறேன். நான், பிரதிவாதியிடம் மூன்று முறை பஞ்சு வாங்கியுள்ளேன் என்றால் இரு முறை வாங்கியுள்ளேன்.நான், பிரதிவாதியிடம் மூன்று முறை பஞ்சு வாங்கியுள்ளதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 24.03.2022 தேதியில் நான் முதல் முறையாக பஞ்சு வாங்கினேன் என்றால் ஆமாம். 26.04.2022 தேதியில் நான் 2ம் முறையாக பஞ்சு வாங்கினேன் என்றால் ஆமாம். 09.05.2022 தேதியில் நான் 3ம் முறையாக பஞ்சு வாங்கினேன் என்றால் ஆமாம்.

3. ஒவ்வொரு முறையும் பஞ்சு வாங்கும்போது ஒரு மாதம் இடைவெளி இருந்தது என்றால் அவ்வாறு இல்லை. மூன்று பில் ரசீதுகளும்

ஒவ்வொரு மாதத்திலும் உள்ளது என்றால் பஞ்சு வாங்கி, பஞ்சு தீரும்போது திரும்ப வாங்குவேன். எனது பிரமாண வாக்குமூலம் 4 வது பத்தியில், 5 வது வரியில், மேற்படி பஞ்சின் தரத்தினை பார்த்து நான் மிகுந்த அதிர்ச்சியடைந்தேன் என சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். ஆனால் அது எந்த தேதியில் எப்போது, வாங்கிய பஞ்சு என எந்த விளக்கமும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் 4 வது பத்தியில், 8 வது வரியில், இந்நிலையில் நான் உடனே பிரதிவாதிகளை தொடர்புகொண்டு மேற்படி பஞ்சின் தரத்தினை பற்றி தெரிவித்தபோது அவர்கள் பஞ்சினை திரும்ப எடுத்து கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டனர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. எந்த தேதியில், எப்போது, எந்த பிரதிவாதியை தொடர்பு கொண்டேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியிடம் நேரடி தொடர்பு இல்லை. இடைத்தரகர் மூலம் தான் பேசுவேன். பஞ்சின் தரம் சரியில்லை என வாய்மொழியாக யாரிடம் சொன்னேன் என்றால் இடைத்தரகரிடம் சொன்னேன். நான் நேரடியாக பிரதிவாதியிடம் பஞ்சின் தரத்தை பற்றி பேசவில்லை என்றால் சரிதான். விலை மறுநிர்ணயம் செய்வது சம்மந்தமாக பிரதிவாதிகளிடம் நான் நேரடியாக பேசவில்லை என்றால் சரிதான்.

5. நான், எழுத்துபூர்வமாக பஞ்சு வேண்டும் என கேட்பேனா என்றால மொபைல் குறுஞ்செய்தி மூலமாகவும், வாய்மொழியாகவும் இடைத்தரகரிடம் கேட்பேன். இடைத்தரகர் பஞ்சு வேண்டும் என பிரதிவாதிகளிடம் எவ்வாறு கேட்பார் என்றால் எனக்கு தெரியாது. இடைத்தரகர் பிரதிவாதியிடம் பஞ்சு வேண்டும் என எழுத்து மூலமாக தான் கேட்பார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்காக நான் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.ஔரங்காபாத் 14 வது குற்றவியல் நீதிமன்றத்தில், என் மீது காசோலை மோசடி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த நீதிமன்றத்தில் நான் அழைப்பாணை பெற்றுக்கொண்டு ஆஜர் ஆகாததால் எனக்கு எதிராக பிணைவிடா பிடியாணை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல, எனக்கு அழைப்பாணை வரவில்லை.

6. என்னிடம் காட்டப்படும் காசோலை நகல் தான், நான், 1ம் பிரதிவாதிக்கு கொடுத்து அதன் பேரில் ஔரங்காபாத் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் SCC.No.2465/2023 காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கு பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் காசோலை தான் நான், 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த காசோலை என்றால் சரிதான். 29.11.2022 தேதியிட்ட **1ம் பிரதிவாதி பெயரில் உள்ள ரூ.6,89,501/- க்கான காசோலை நகல் பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). அது செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலை ஆகும்.

7. என்ன காரணத்திற்காக செக்யூரிட்டிக்காக கொடுத்தேன் என்றால் பஞ்சு வாங்குவதற்கு முன்பாக காசோலை பெற்றுக்கொள்வார்கள், அதன் பின்னிட்டு பஞ்சை அனுப்புவார்கள். எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்குரையில் பஞ்சு வாங்குவதற்கு முன்பாக செக்யூரிட்டிக்காக காசோலை பெற்றுக்கொள்வார்கள் என்றும், அதன் பின்னிட்டு பஞ்சை அனுப்புவார்கள் என சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பஞ்சு வாங்குவதற்கு முன்பாக காசோலை கொடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு தாக்கல் செய்த போது நிலுவை தொகை ரூ.67,04,477/- நிலுவையில் இருந்தது என்றால் இருக்கலாம். குறிப்பாக தெரியவில்லை.

8. அசல் வழக்கை 22.12.2022 அன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டிய ரூ.67,04,477/- பணத்தை தராமல் சட்டவிரோதமாக லாபம் பெற வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையது இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பமும், ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பமும் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் இல்லை. என்னுடைய கையெழுத்து இல்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு தற்போது பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. நான் என்ன காரணத்திற்காக ஒரு மாதத்திற்கு முன்பாக காசோலை கொடுத்தேன் என்றால் முதலாவதாக பஞ்சு எடுக்கும்போது கொடுத்தது. எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில், 5 வது பத்தியில், பிரதிவாதி என் மீது புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும், எதற்காக என் மீது புகார் கொடுத்தார் என்றால் தெரியாது. ஆய்வாளர் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளுமாறு சொன்னார். எனது பிரமாண வாக்குமூலத்தில் INVOICE ன் படி பணத்தை கொடுக்குமாறு என்னிடம் சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பணம் கொடுத்து விடுவதாக காவல்துறையினரிடம் ஏதாவது கடிதம் எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை.

10. 17.12.2022 தேதியில், பிரதிவாதிகள் அவரது அடியாட்களுடன் வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அவர்கள் எந்த நிறுவனத்திற்கு வந்தனர் என்றால் கோதபாளையத்தில் உள்ள நிறுவனத்திற்கு வந்தனர். பணம் செட்டில்மெண்ட் செய் என சொல்லி சண்டைக்கு வந்தனர். கோதபாளையம் நிறுவனத்தில் கண்காணிப்பு கேமரா உள்ளதா என்றால் உள்ளது. சாட்சி மீண்டும் அப்போது இருந்ததா என்று தெரியவில்லை என சாட்சியம் அளிக்கிறார். பிரதிவாதிகள் அவரது அடியாட்களுடன் வந்ததாக சொல்லும் பதிவை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 17.12.2022 தேதியில், பிரதிவாதிகள் என்னை மிரட்டினரா என்றால் ஆமாம். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை.

11. காவல் நிலையத்தில் ஏன் புகார் அளிக்கவில்லை என்றால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ள வழக்கு தாக்கல் செய்தேன். 17.12.2022 தேதியில், பிரதிவாதிகள் அவரது அடியாட்களுடன் வரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, வந்தார்கள். பிரதிவாதிகளுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை ஏமாற்ற வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் தான் தவறான பஞ்சை கொடுத்து ஏமாற்றியுள்ளனர். பிரதிவாதிகள் தவறான பஞ்சை கொடுத்ததாக எழுத்துபூர்வமாக எந்த இடத்திலும்,

யாரிடமும் கூறவில்லை என்றால் பஞ்சின் தரம் தவறானது என அரசு சான்றிதழ் உள்ளது. அந்த அரசு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை.

12. இந்த வழக்கில் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், பிரதிவாதிகளிடம் இருந்து சட்டவிரோதமாக பலன் அடைய வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur